# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
28441286 / 28440938 பேக்ஸ்: 28443601 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


**<u>பதிவு அஞ்சல் / ஒப்புகை அட்டையுடன்</u>**

கடித எண்.24/2021 நாள். 13.08.2021

பெறுநர்

**பதிவுத்துறை தலைவர்**
பதிவுத்துறை அலுவலகம்
எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை
சென்னை-600028

ஐயா,

பொருள் : சங்கம் - தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் (பதிவு எண்.237/84) - சங்க விதிகளுக்கு புறம்பாக செயல்பட்ட மாவட்ட சங்க நிருவாகத்தினை கலைத்தது - இறுதியாணை பிறப்பித்தது மற்றும் சங்கம் மீள் பதிவேற்று ஆணை வழங்கிட கோருதல் - தொடர்பாக

பார்வை :
1. தங்கள் கடித எண்.34262/11/2019, நாள்.02.12.2019, 11.02.2020 மற்றும் 07.01.2021
2. தங்கள் கடித எண்.43374/11/2014, நாள்.27.01.2021 மற்றும் 18.02.2021
3. சென்னை உயர்நீதிமன்ற (மதுரை கிளை) நீதி பேராணை மனு W.P.(MD)No.7892/2021
4. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கடிதம், நாள்.12.03.2020 மற்றும் 18.01.2021
5. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கடிதம் எண்.9/2021, நாள்.16.03.2021

********

வணக்கம்.

பார்வையில் கண்டுள்ள கடிதங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து தங்களால் மேற்கொள்ளப்பட்ட நேரடி விசாரணை ஆகியவற்றின் மீது தங்களின் மேலான கவனத்தை ஈர்க்கப்படுவதும் சங்கத்தினை மீள் பதிவேற்ற ஆணை வழங்கி தீர்வு காண விழைகின்றோம்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**
எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக ஏற்கனவே சங்க பதிவை மீள் பதிவேற்ற ஆணை வழங்க கோரி தாக்கல் செய்த மனு நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் கோரிக்கையின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் கடந்த 21.01.2020 அன்று மீள் பதிவேற்ற ஆணை குறித்த மேல் முறையீட்டு மனுவினை 31.03.2020குள்ளாக முடிவெடுக்க வேண்டுமென உத்திரவிட்டுள்ளது. (W.P.No.27663 of 2019) இந்நிலையில் திரு. சீராளன் என்பவர் எந்தவித நியாயமான காரணமும் இன்றி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடத்தில் மனு அளிக்கப்பட்டு, அந்த மனுவின் மீது தங்களால் விசாரணை நடத்தப்பட்டது.

எங்கள் தரப்பிலும் அனைத்து விசாரணைக்கும் நேரில் ஆஜராகி விசாரணையின்போது எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளோம். அதன் பின்னர் உத்தரவு குறித்து தகவல் தெரிவிப்பதாகவும், உத்தரவு நகலை சார்பு செய்வதாகவும் தெரிவித்தீர்கள். இந்நிலையில் கடந்த 16.4.2021 அன்று திரு. சீராளன் அவர்கள் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து (W.P.(MD)No.7892/2021), அதில் தாங்கள் 02.03.2021 தேதியன்று பிறப்பித்த உத்தரவினை நீக்கறவு செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்து, அந்த வழக்கில் இடைக்கால தடை உத்தரவு 16.04.2021 பிறப்பிக்கப்பட்டுள்ளது கண்டு அதிர்ந்து உறைந்து போனோம்.

காரணம், தங்கள் அலுவலகத்தில் நடத்தப்பட்ட விசாரணையில் எங்கள் சங்கத்தின் சார்பாக பிரதிநிதிகளும், வழக்கறிஞர்களும் ஆஜராகி எங்கள் தரப்பு நியாயமான மற்றும் விரிவான விளக்கத்தை அளித்து மேலும் அந்த விளக்க காரணங்கள் குறித்து தங்களுடைய உத்தரவில் மேற்கோள் காட்டப்பட்டு இருந்தாலும், உத்தரவு நகலை எங்களுக்கு ஏன் சார்பு செய்யவில்லை என்று தெரியவில்லை.

மேலும் சீராளன் என்பவருக்கு மட்டும் உத்தரவு நகலை அளித்தது நியாயத்திற்கும் தன் மனசாட்சி மற்றும் நீதிநெறி வழிகாட்டுதலுக்கும் எதிரானதாகும். அதுமட்டுமல்லாமல் எங்கள் சங்கத்தின் மீள் பதிவேற்றம் குறித்து உயர்நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டு இருந்தாலும், தாங்கள் அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காதது சட்டத்திற்கும் எதிர்மறையான ஒன்றாகும். எனவே எங்களுக்கு சார்பு செய்ய வேண்டிய உத்தரவு நகலை உடனடியாக வழங்க வேண்டியும், அதேபோல் சங்கம் குறித்த மீள் பதிவேற்ற ஆணை பிறப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

| | |
|---|---|
| **(மு.அன்பரசு)** | **(ஆ.செல்வம்)** |
| மாநிலத்தலைவர் | பொதுச் செயலாளர் |
| செல். 9840187508 | செல். 9443930500 |